எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

NEWREC

1 அக்டோபர் 2017
பொது காலம்
26ம் ஞாயிறு

# தன்னையே வெறுமையாக்கி + கீழ்படிதல் நம்பிக்கைக்கு இட்டுச் செல்லும்






"பரலோக அரியாசனத்தை விட்டு கன்னியின் கருவயிற்றில் வந்திறங்கியது போல் ஒவ்வொரு நாளும் அவர் தம்மைத் தாழ்த்திக் கொள்கிறார். தந்தையின் அரியணையை விட்டு, பீடத்தில் குருவின் கையில் வந்திறங்கியது போல் நமது எளிமையைக் காண்பதற்கு ஒவ்வொரு நாளும் அவர் நம்மிடம் வருகிறார்."

- புனித பிரான்சிஸ் சேவியர்

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார் " (பிலி. 2:6–7).

தம்மையே வெறுமையாக்குதலின் கோட்பாட்டையும் இயல்பையும் கத்தோலிக்கர்கள் புரிந்து கொள்வதற்கு உதவியாக, கிறிஸ்துவே ஓர் உதாரணத்தை ஏற்படுத்தியுள்ளார். இதனை புனித பவுல், மேற்குறிப்பிட்ட வசனத்தில் நன்கு விளக்கியுள்ளார். அப்படியென்றால், 'தம்மையே வெறுமையாக்குதல்' என்றால் என்ன? இதனைப் புரிந்து கொள்வது பயனுள்ளளதாக அமையும் ஏனெனில் அது ஒரு மனிதாபினமான செயல், கடவுளின் சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுப்பதே தம்மையே துறக்கும் செயல்(மத். 16:24). "தெளிவும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும்" தரும் செயல் என துறவறமார்களுக்கு ஆற்றிய உரையில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறிருக்கிறார்.

நமது விசுவாசத்தை அறிக்கையிடும் போது "ஸ இயேசு மெய்யங் கடவுளாகவும் உண்மையான மனிதனாகவும் இருக்கிறார், எப்போது இருப்பார், அவர் எடுத்துச் செல்லப்படவில்லை, தானாகவே பரலோகம் சென்றார்"(கத்தோலிக்கத் திருச்சபை மறைக்கல்வி CCC#469). எதற்காக இயேசு இதனைச் செயதார்? நமக்காக, நமது நம்பும் மீட்புக்காக. " வெறுமையாக்கும் இந்த கோட்பாட்டில்" நாம் எவ்வாறு வாழ்கிறோம்? என திருத்தந்தை வினவுகிறார். இயேசுவோடு நமது உடல் பொருள் ஆவியை கலந்து விடுமாறு நாம் அழைக்கப்படுகிறோம். "நான், எனது" என்ற உலகமயப் போக்கை விடுத்து, கிறிஸ்து போன்று பிறர் மையப் போக்கை கடைபிடிக்க வேண்டுமென இன்றைய முதல் வாசகத்தில் புனித பவுல் அறிவுறுத்துகிறார். "இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்வோம்"(உரோமர்13:14), "கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்" (பிலி. 2:5) காரணம் நமதுடல், மனித ஆன்மாவையும் ஆவியையும் முழுமையாக நிறைவுப்படுத்த முடியாது.

யோவான் 7:37 இயேசு குறிப்பிடும் "வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து" நம்மில் "உள்ளத்திலிருந்து" ஓடும். நமது உள்ளத்தின் வெறுமை நிலையை இயேசு குறிப்பிடுகிறார். தூய ஆவியின் வாழ்வு தரும் தண்ணீரால் மட்டுமே நிறைவு செய்ய முடியும். நம்மில் கடவுளுக்காக ஏங்கும் நிலையை இது வருணிக்கிறது என சில விவிலிய அறிஞர் கூறுகின்றனர். தம்மையே மறுத்து, புது வாழ்வு பெறும் இறைச் சித்தத்திற்குக் கீழ்படியும் நமக்கு இது பொருந்தும். சுயநலத்தையும், பாவ நிலையையும் மன்னியா நிலையையும் கைவிட்டு, பிறர் நலத்தில் அக்கறை கொண்டு, நிலைவாழ்வில் நம்பிக்கை கொண்டு வாழ வேண்டும். இதுவே இறைச் சித்தம். "இறைவா நீரே உமக்காக எம்மைப் படைத்தீர், உம்மை வந்து சேரும் வரை எமது உள்ளம் அயராது" என்ற புனித அகுஸ்தீனாரின் வாக்கு இந்த உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. கடவுளின் மீட்பின் திட்டத்தில் சாவுக்குரிய நமது ஆன்மாக்களை தண்டனை தீர்ப்பிலிருந்து காக்கும் இறையருளுக்கு ஒத்துழைப்பதே தம்மையே வெறுமையாக்குதன் அர்த்தம். " அந்த எதிர்நோக்கு (நம்பிக்கை) ஒரு போதும் ஏமாற்றம் தராது; ஏனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது" (உரோமர் 55). நமது வெறுமையைக் கடவுளின் நிறைவால் பூர்த்திச் செய்ய நாம் அனுமதிக்கும் போதே கடவுளின் ஆவியின் ஆலயமாக மாற, தம்மையே வெறுமையாக்குவது உதவும். ✢

Published by: Peninsular Malalaysia Pastoral Team
api@archkl.org
Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

INTERNAL CIRCULATION ONLY



## மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*
***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***
*2017 அக்டோபர் (ஐப்பசி) மாதத்தின் கருப்பொருள்:*
*எல்லை தாண்டிய சாட்சியம்*

# *மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்*
## *( 1848 – 2018 )*

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** **பொதுக்காலம் (ஆண்டு ஒன்று) 26ஆம் ஞாயிறு சனி 30-09-2017 ஞாயிறு 08-10-2017**

**எசே 18: 25 – 28 தி.பா 24: 4bc -5, 6-7, 8-9, பிலிப் 2: 1-11 (1-5) மத் 21: 28-32**

**ஆண்டவரே, உம் இரக்கத்தையும், பேரன்பையும் நினைத்தருளும் ( சங் 24 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 30 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. புருணோ 1) | |
| ஞாயிறு | 01 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி தமிழ் ()<br>திருப்பலி ஆங்கிலம் (பு. புருணோ 2)<br>திருப்பலி சீனமொழி<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 02 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 03 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 04 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 05 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 06 | காலை திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (ஆ) – மினவுதல் மாதா தேவாலயம்*** |

**பொதுக்காலம் 27ஆம் ஞாயிறு : ( ஆண்டு ஒன்று)**

**எசா 5: 1 – 7 தி.பா 79: 9, 12, 13-14, 15-6, 19-9, பிலிப் 4: 6-9 மத் 21: 33-44**

**ஆண்டவருடைய திராட்சைத் தோட்டம் இஸ்ராயேல் குடும்பத்தாரே ( சங் 79 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 07 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. புருணோ 3) | |
| ஞாயிறு | 08 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம | திருப்பலி தமிழ் ( பு. சிசிலியா)<br>திருப்பலி ஆங்கிலம் (பு. ஆர்தர்)<br>திருப்பலி சீனமொழி<br>மாலை 4.30 தித்தி (சீன மொழி)<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக கொடர்ப கொள்ளவும்.

### 2017 அக்டோபர் (ஐப்பசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்

1. **ஆலய காணிக்கை** 23/24 செப்டெம்பர் ரிம: 8,253.10
   தித்தி : ரி.ம : 59.00
   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

2. **30-09-2017, 01-10-2017 ஆகிய நாட்களில்** சமூக அக்கறைப்பணிக குழுவிற்காக இரண்டாவது காணிக்கை எடுக்கப்படும்
   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

3. **மினவுதல் தேவாலய பங்கு மக்களுக்கு வாழ்த்துகள்.** செப் 16 மலேசிய தினத்தன்று மலேசிய கொடியைப் பறக்கவிடுவோம் என்ற போட்டியில், நெகிரி மாநில அளவில் நம்முடைய தேவாலயம் பரிசை வென்றது. அக்டோபர் 10, 2017 அன்று மாநில முதலமைச்சர் நமக்கு அந்த பரிசினை வழங்குவார்.

- **மறைக்கல்வி மாணவர்களுக்கு சிறப்பு திருமுழுக்கு(அனைத்து மொழி)** மறைக்கல்வி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பெற்றோர்களின் கவனத்திற்கு: உங்களுடைய விண்ணப்ப படிவங்களை தேவைப்படும் சான்றிதழ்களோடு பங்கு அலுவலகத்தில் அக்டோபர் 15, 2017 க்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- **ஃபோர்ம்ட் (FORMED) பின்பற்றுவதற்கு ஒரு பயிற்சி**
  33 நாட்கள் செப வழிபாடு - ஆங்கிலத்தில் நடைபெறும் இந்த செபவழிப்பாட்டு முறையைக் கற்றுக்கொள்ள அழைக்கிறோம்.
  நாள்: 21 அக்டோபர் காலை 8.30 - பகல் 1.00 வரை
  மறைக்கல்வி ஆசிரியர்கள்/பணிக்குழு பொறுப்பாளர்கள்/அதிச , வட்டார பொறுப்பாளர்கள், இளைஞர்கள், மற்றும் ஆர்வமுள்ள பங்கு மக்கள் அனைவரையும் இதில் பங்கேற்க அழைக்கிறோம். திருப்பலிகளுக்குப் பின் இதற்கான பதிவுகள் நடைபெறும். (குறிப்பு: உங்களுடைய விவேக தொலைபேசி, விவேக நோட்புக் உடன் கொண்டுவர மறக்க வேண்டாம்)
  தொடர்புக்கு: எரிக் 012-297 2413

- **முதன்மைக்குரு அருள்திரு அந்தோணி தோமஸ்** அவர்களின் மறைவு (80 வயது) இவரை நமக்குக் கொடுத்த இறைவனுக்கு நன்றி கூறுவோம். இவர் நம்முடைய மினவுதல் தேவாலயத்தில் 1991-1998 வரை நமக்காகப் பணியாற்றியுள்ளார். இவருடைய ஆன்மா நித்திய இளைப்பாற்றியை அடைய தொடர்ந்து இவரை நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்.

- **அக்டோபர் 2017 - அதிச மற்றும் வட்டாரங்களில் நடைபெற இருக்கும் திருப்பலிகளின் அட்டவனை:**

  **2/10 (திங்கள்) வட்டாரம் - 1 ( புனித பர்த்தலொமெயு)** 383, தாமான் பங்காவான், ஜலான் துன் டாக்டர் இஸ்மாயில் (ரோசலின் லுவா - 014-963 8058)

  **03/10 (செவ்): வட்டாரம் -2 (புனித ஜேம்ஸ்)** 15, ஜலான் 5, திமியாங் டேசா ( இருதயநாதன் -017-234 3810)

  **04/10 (புதன்): வட்டாரம் 3 (புனித ஜூட்)** புனித பிரான்சிஸ் சவேரியார் சிற்றாலயம், சிக்காமட் (ஜோர்ஜ் -018-2022919)

  **05/10 (வியாழன்) வட்டாரம் 4 (புனித சைமன்)** -புனித திரேசா சிற்றாலயம், ராசா நியு வில்லேஜ் ( சார்ல்ஸ் 012-3820471)

  **06/10 (வெள்ளி) வட்டாரம் 5 (புனித போல்) 1/3288** தாமான் சிரி லாபு, ஜலான் சுங்கை உஜோங் (வின்செண்ட் சின்னப்பன்)

- **அக்டோபர் - செபமாலை மாதம்:** அனைத்து அதிச க்களும் செபமாலை பக்திமுயற்சியை இல்லங்களில் செபிக்க அழைக்கிறோம். வட்டார பொறுப்பாளர்கள் உங்களுடைய வட்டாரங்களில் செபமாலை மற்றும் திருப்பலிகள் நடைபெறுவதை நினைவில் கொள்ளுங்கள்.
  தொடர்புக்கு: ஜோன் மெய்னார்ட் (012- 6656 411)

- **மினவுதல் மாதா தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
  - நினைவுப்புத்தகம்: இதை வடிவமைக்க தன்னார்வலர்கள் தேவைப்படுகிறார்கள். உங்களுடைய உதவிகரத்தை இதில் இணைக்க விரும்பினால் தொடர்புகொள்ளுங்கள்; சார்ல்ஸ் பெர்னாண்டஸ் (012-3820471)
  - இதன் தொடர்பாக உங்களிடம் பழைய புகைப்படங்கள் இருந்தால் கொடுத்து உதவுங்கள். பங்கு அலுவலகத்தை நாடுங்கள்
  - கோமேட் 2, நடனத்துடன் கூடிய விருந்து நிறைவாக நடந்து முடிந்ததற்காக நன்றிகள். இதற்காக ஒத்துழைத்த விழாக்குழுவினர் மற்றும் பங்கு மக்கள் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகுக!

- உங்களுடைய செல்லப்பிராணிகளுக்கு ஆசீர்: (புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழா) அக்டோபர் 8 (ஞாயிறு) மாலை 5.00 மணிக்கு மாதா கெபியின் முன் ஆசீர் வழங்கப்படும்

- மறைதிரு அண்ட்ரூ கூய் அவர்கள் அக்டோபர் 03- 09 வரை குவாந்தானில் இருப்பார்
- **பங்கு மேய்ப்புப்பணி மாநாடு:** 15/10/2017(ஞாயிறு) பகல் 2-5 வரை மினவுதல் தேவாலய மண்டபத்தில் நடைபெறும். (பதிவுகள் அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னர் நடைபெறும்)
- **15-10-2017 (ஞாயிறு) தே.மொழி திருப்பலி (மதியம் 1.00 மணி) நடைபெறாது**
- **குருக்களின் மாதாந்திர தியானம்:** 17 & 18 அக்டோபர் APC, கோலாலம்பூர்
- **நற்கருணை ஆராதனை மாநாடு 2017** 11/11/2017 காலை 8.30 மாலை 4.00 வரை பெட்டாலிங் ஜெயா புனித் இக்னேசியஸ் ஆலயத்தில் நடைபெறும். அனைத்து திருப்பலிகளுக்குப் பின் இதற்கான பதிவு நடைபெறும்.
  (தொடர்புக்கு: ஸ்பென்சர்: 012- 325 6718)

***மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்:***
மேரி ஆன் கூ சாய் மூய் ( இறப்பு: 26-09-2017)
***முடிவில்லா ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!***

***திருமண கொண்டாட்டம்:***
எட்வின் நோவேல் & டோன்னா ட்ரேசி :
நாள்: 07-10-2017 காலை 11.00மணி